# இலக்கிய நாயகி

# சீதை

கவியாக்கம் :

'முத்தமிழ்ச் செல்வர்'

## ரெ. இராமசாமி

மணமக்கள் :

கிருட்டிணன், M. Tech. மெய்யம்மை

(பிரமாதீச, ஆவணி 24. 9—9—1973.)

## திருமண அன்பளிப்பு



வழங்கியது :

ரெ. இராமசாமி.

கண்டனூர், இராமநாதபுரம் மாவட்டம்.

முதற் பதிப்பு: ஆகஸ்டு, 1973



மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.

# உரிமைப்பா

மெய்ப்பொருளாம் இறைவன்றன் அருளால் அன்று
    மேன்மையுற எனைமணந்து வாழ்ந்த நாளில்
மெய்ப்பொருளாம் தன்னெழிலும் அன்பும் சார்ந்து
    வெகுவாக எனைப்பேணி இன்பம் தந்த
உய்ப்பொருளாய் உயர்மனையாய் உலவி வந்த
    உத்தமியாம் எனதுமுதல் மனைவி என்னும்
மெய்யம்மைக் கிந்நூலை உரிமை யாக்கி
    மென்மேலும் அவள்நினைவை வளர்க்கின் றேனே.

ரெ. இராம.

# உள்ளுறை

ஓம்

# நூன்முகம்

ஒருவன் தன் உள்ளத்தெழும் பல்வகை உணர்ச்சிகளைப் பிறர் உள்ளத்துள் கொள்ளச்செய்யும் வகையில் உருவாக்கும் பெருமை சார்ந்த அருமையான நூலே இலக்கியம் எனப்படும். அதனைப் பயிலுங்கால் பலவகை நயங்களைப் பயந்து, பல்சுவை உணர்ச்சிகளுடன் கூடிய படிவ அமைப்பும் பாங்காகப் படிந்திருத்தலே இலக்கியத்திற்குரிய பான்மையாகும். அந்தப் பான்மைகள் அனைத்தும் அழகுறப் பெற்றது இராமாயணம் என்னும் இதிகாச காவியம். அது ஆதி காவியம் என்ற அருஞ் சிறப்புப் பெற்றது. அத்துடன் சிறையிருந்த செல்வியாம் சீதையின் ஏற்றம் கூறுவது இராமாயணம் என்பர் ஆன்றோர்.

தன்னிகரில்லாத் தன்மை, உயர்தனிச் செம்மை போன்ற இலக்கியத் தகுதிகளை அந்த இலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் வழியே படைக்கின்றான் அதன் ஆசிரியன். தகைசார்ந்த தனிஉயர் இலக்கியத்தில் அத்தகு தகுதிகளைத் தன்னகத்தே கொண்டு தலையாய நிலையில் உலவுபவன் பாட்டுடைத் தலைவனாகிய இலக்கிய நாயகன். அவனை அடுத்து இலங்குபவள் பாட்டுடைத் தலைவியாகிய இலக்கிய நாயகி. அந்த இலக்கிய நாயகியின் வாழ்க்கை அனுபவங்களை வண்ணமாக வழங்கும் வகையில், அதனைச் சுவைப்பவர்களுக்கு உயர்வான மானிடவாழ்வின் உண்மைகளை உன்னதமாகப் பலவாறு உணர்த்துவான் அவளை உருவாக்கிய இலக்கிய ஆசிரியன். அவ்வாறு உயரிய முறையில் உருவாக்கப்பெற்று, தன் சீரிய கற்பு நிலையைச் சிகரமாகக் காட்டும் சிறந்த இலக்கிய நாயகி சீதை. அவளது பெருங் கதையே சீர்சால் கம்பர் பெருமானின் சித்திர இலக்கியம் என்னும் சிறப்பு மிக்க கம்பராமாயணம் என்று செப்பினால் அதில் சிறிதும் ஐயமில்லை.

நாயகன் என்பவன் அழகு, இளமை, புகழ், ஆண்மை, ஆக்கம், ஊக்கம், அருள், கொடை, குலநலம் முதலிய குணங்கள் கொண்டவனாய் இருத்தல் வேண்டும் என்று கூறுவர். சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத் தலைவனாகிய சீவகனிடத்தில் இக்குணங்கள் எல்லாம் செறிந்திருந்தமையால் அவனைத் தன்னிகரில்லாத் தலைவன் என்று சொல்லுவார்கள் இலக்கிய ஆய்வாளர்கள்.

" நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய் "

என்று காவியத் தலைவனின் தகுதியைத் தண்டியலங்காரம் விண்டுரைக்கிறது. அதற்கிணங்க இலக்கிய நாயகன் ஒருவன் எப்படித் தன்னிகரில்லாத் தலைவனாக இலங்குவானோ அதுபோல இலக்கிய நாயகியும் இலங்குவது ஏற்புடையதல்லவா? ஆகவே இலக்கிய நாயகி ஒருத்திக்கு இருக்க வேண்டிய இனிய பண்புகள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவள் மகாகவி கம்பர் காட்டும் மாண்புறு சீதையாவாள்.

கவிச் சக்கரவர்த்தி கம்பர் பெருமானால் படைக்கப்பெற்ற பாட்டுடைத் தலைவி என்னும் கற்புக்கரசியாம் பொற்புறு சீதையின் அற்புதப் பெண்மையை எடுத்துக் கூறும் வகையில், கோலாலம்பூர், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பத்தாவது ஆண்டுவிழாச் சிறப்புக் கவியரங்கில், தமியேனால் பாடப்பெற்றது இலக்கிய நாயகி சீதை என்ற கவிதையாகும். அக் கவிதையைத் தலைப்பாகக் கொண்டு இக் கவிதை நூல் வெளிவருகிறது. மலேசியா, அலோர்ஸ்டார், தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் முதல் ஆண்டு விழாச் சிறப்புக் கவியரங்கத்தில், இமயசோதி சுவாமி சிவானந்த சரசுவதி வகுத்துள்ள தெய்வீக வாழ்வின் சிறப்புறு அறநெறிகளில் ஒன்றான, "தியானம் செய்" என்பதுபற்றித் தமியேன் பாடிய கவிதையும், செல்வி தாலாட்டு, ஆறுபடை வீடுகள் ஆகிய என் கவிதைகளும், இணைக்கப்பெற்ற ஒரு கவிதைத் தொகுப்பாக இந்நூல் இலங்குகிறது. இதனைத் துய்த்து இன்பம் பெறுமாறு அன்பர்களை இனிது வேண்டுகிறேன்.

இந்நூலுக்கு அன்பு கூர்ந்து அணிந்துரையகவல் அழகுற வரைந்து வழங்கியுள்ள என் மதிப்பு மிக்க கெழுதகை நண்பரும், காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமான கவிஞர் கோமான் உயர்திரு. க. தேசிகனர் அவர்களுக்கும், ஆன்ற அன்புடன் சாற்றுகவி அளித்துள்ள என் போற்றற்குரிய பெருந்தகை நண்பர், திருப்புத்தூர், புலவர், 'கவித் தென்றல்' உயர் திரு. அ. முத்தையனர் அவர்களுக்கும் எனது உளம் ஒன்றிய நன்றி உரியதாகுக.

வணக்கம.

கண்டனூர்.
9—9—1973.

**ரெ. இராமசாமி.**

# அணிந்துரை யகவல்

அறிந்தவர்; உணர்ந்தவர்; அடக்கமே வடிவினர்;
சிறந்ததன் மானமும் செந்தமிழ் முருகன்
உறைந்தருள் புரியும் ஓங்கிய மலைபோல்
நிறைந்து நிமிர்ந்த நெஞ்சினர்; என்பால்
அன்பினர் இராம சாமிபோல் ஆருளர்!
முன்புசெய் தவமோ! 'முத்தமிழ்ச் செல்வர்'!
பேணுதல் வல்ல பெண்மைச் சிறப்பை
நாணுதல் அச்சம் மடம்பயிர்ப் பிடையே
புடம்போட் டெடுத்த பொற்புடைக் கற்பு
நடம்புரி யரங்கே நந்தமிழ் நாடு
செந்தமிழ் நாட்டுச் செல்வர் செல்வியர்
சிந்தைக் கினிய செம்பொருள் கற்பினை
எதிர்மறை யுடன்பா டெத்திறத் தானும்
சதிர்பெறக் காட்டி அரசி, அணங்கெனக்
கானக வாழ்வின் களிப்பெனச், சிறையில்
தானிருந் துயர்ந்த செல்வி, தூயவள்,
அனுமன் அன்னை, கற்பின் கனலி
எனுமுறை வகுத்தே இணையிலாக் கம்பன்
காட்டிய நெறியில் காவிரி வயலை
ஊட்டியே வளர்த்திங் குதவிடு செயல்போல்
மானிடந் தழைக்கப் பாடுவார் கண்டனூர்
தானிடங் கொண்டு தழைத்திடு செல்வர்,
தொகுத்த பெண்மைத் தோகை விரித்தே
மிகுத்த களியால் ஆடும் மயிலென
யாத்த இராம சாமியென்
ஆத்தாள் சீதை யருளால் வாழ்க!

கவிஞர் கோமான், க தேசிகன்.
தமிழ்ப் பேராசிரியர்,
அழகப்பா கல்லூரி.

காரைக்குடி
7—8—1973

முன்பு மலேசியா பீடோங்கிலிருந்தவரும், தற்போது தமிழ்நாடு திருப்புத்தூரில் உறைபவருமான, முது பெரும் புலவர், ‘கவித்தென்றல், உயர்திரு **அ. முத்தையனார்** அவர்கள் அன்புகூர்ந்து அளித்துள்ள

# சாற்று கவிகள்

வளமிக்க நாடெனவே உலகம் போற்றும்
மலேசியத்தின் தலைநகரின் மாண்ப மைந்த
[1] குளமிக்கும் எழுத்தாளர் சங்கந் தன்னில்
கோதற்ற பத்தாண்டு விழாவைக் காண
உளமிக்கும் உவகையுடன் பலருங் கூடி
உம்பர்தொழும் சீதைநலம் உரைப்பார் தேடி
[2] ஒளிமிக்க வருந்திடினும் ஊர்கள் தோறும்
ஓயாமல் அலைந்துமிகத் தவித்தார் மன்னே.

அத்தருணந் தன்னிலொரு நண்பர் கூற
அலோர்ஸ்டார் நகரையடைந் தன்பு பொங்கும்
சித்தமுளான் கண்டனூர் இராம சாமிச்
செவ்வியனைத் தமிழ்பரப்பும் செம்மல் தன்னை
முத்தமிழின் செல்வரெனும் உயர்ந்த பட்டம்
மூதறிஞ ராற்பெற்று முன்னிற் பானை
எத்திசையும் புகழ்வானை இரப்போர்க் கென்றும்
ஈந்துமனம் உவப்பானை இனிதே கண்டார்.

கண்டதும்தன் வறுமையெலாம் கதறி ஓடக்
கனகத்தின் பொதிவைப்புப் பெற்றார் போன்று
மண்டுதுயர் அத்தனையுங் கூறக் கேட்டு
மனமிரங்கி அவர்கவலை மாற்ற எண்ணி
கொண்டனன்உம் வேண்டுதலை ஏற்றேன் நீவீர்
குறைகளைவீர் என்றுரைத்தார் குளிர்பூஞ் சோலை
கொண்டிருக்குந் தேனைவண் டருந்தி னாற்போல்
குழுமியவர் மனமகிழ்வுற் றேகி னாரே.

---

1. குளம்— வெல்லம்
2. ஒளி – வெயில்

சங்கத்தார் வேண்டுதலுக் கிசைந்தி லக்ய
சானகியை நாயகியாந் தலைப்பை ஈந்து
துங்கத்தார் இராமவர லாறு கூறி
தூயகவிச் சக்ரவர்த்தி கம்பன் சொற்ற
பங்கமிலாச் சீதைதிரு மணச்சி றப்பைப்
பகர்ந்தபின் அயோத்திவந்து நீங்குந் துன்பம்
மங்கிடவே கானகத்தில் வாழ்க ளிப்பை
வகைவகையாய்ச் சொற்றதற்பின் அரக்கர் வேந்தன்

வெஞ்சிறையில் இட்டதுன்பம் விரிவாய்க் கூறி
வீணனுடன் தூயவள்தான் வாதம் செய்த
அஞ்சலிலா வீரவுரை அனைத்தும் சொன்னார்
அனுமன்தன் நல்வரவால் ஆறி யுள்ளம்
துஞ்சலின்றி இருந்ததுயர் நீங்குங் காலை
தூயவள்முன் மாயவுருக் கொண்டு நின்ற
வஞ்சகனைத் தந்தையல்ல என்று கூறும்
வாய்மைமிகு சீதைதுயர் வருந்திச் சொன்னார்.

கற்புமிகு சீதைபுகழ் பேசக் கண்டோம்
காசினியில் பெண்பெருமை கூறக் கண்டோம்
பொற்புமிகும் அவைதனிலே இருந்தோர் எல்லாம்
பொன்ருத உணர்விருந்தும் அசைவில் லாத
சிற்பமென வீற்றிருந்தார் எனினும் நூலாய்ச்
செய்தளிக்க வேண்டிநின்ரூர் செவியில் ஏற்றுக்
கற்பகத்தின் கரதலத்தான் இராம சாமி
காசினியோர் போற்றிடஇந் நூல்கண் டானே.

தெய்வீக வாழ்க்கையெனுந் தியானத் தன்மை
செப்பிடுமோர் பகுதியினைச் சேர்த்துப் பின்னும்
மையிட்டுத் தொட்டிலிலே மதலைச் செல்வி
மனங்குளிர்ந்து கண்வளர உயர்தா லாட்டு
நெய்யிட்ட வேல்தாங்கும் வேலர் தங்கும்
நீடியநல் ஆறுபடை வீடும் சேர்த்துப்
பையிட்ட கைதனிலே ஈகை தங்கும்
பாவாணன் இந்நூலைப் பயந்தான் மன்னே.

## ஆனைமுகன் வணக்கம்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

மண்ணினைப் புரக்கும் தேவே !
வாரண முகத்தைக் கொண்டோய் !
வண்ணமார் தமிழில் பாடல்
வார்த்திடும் விழைவு கொண்டேன்
எண்ணம்போல் கவிதை பாடும்
எழிற்றிறம் எனக்கு நல்கி
எண்ணிலாக் கவிதை நூற்கள்
இயற்றிட அருள்கூர் வாயே !

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

கண்ணுதற் பெருமான் பணயமாய் வைத்த
கனிதனைப் பெற்றிட முன்னாள்
எண்ணிய நிலையில் வலமதாய் அவனை
இலகுவில் சுற்றியக் கனியை
நண்ணிய தேவே! நற்றமிழ்ப் பாடல்
நன்கியற் றுந்திறம் நல்கித்
தண்ணருள் புரிந்து தமியனைக் காத்தென்
தமிழறி வோங்கிடச் செய்வாய்.

## ஆறுமுகன் வணக்கம்

(கட்டளைக் கலித்துறை)

அருண கிரியார் அகத்திய னருக் கருள்சுரந்து
முரணில் தமிழை முழுதும் புகன்ற முருகையனே!
அரனாய்க் கருதி அனுதினம் போற்றும் அடியனுக்குத்
தருணம் இதுவென எண்ணித் தமிழைத் தருகுவையே.

ஓம்

# இலக்கிய நாயகி
# சீதை

## ஆதிபகவன் வணக்கம்

(நேரிசை வெண்பா)

உலகுயிர்த் தோற்றம் உடன்காப்பு நீக்கம்
நிலவிடும் தேவனும் நித்தா!— அலைவண்ண
ஆண்டகைதன் சீதைபற்றி ஆர்ந்தகவி நான்பாட
வேண்டுமருள் செய்வாய் விரைந்து.

## அன்னைத் தமிழ் வணக்கம்

(நேரிசை வெண்பா)

இயலிசை கூத்தெனும் இன்முத் தமிழால்
நயந்தரும்பன் மாலையணி நற்றாய்!— வியன்மிகு
சீதைக்குப் பாமாலை செப்பவே செம்பொருளாம்
பாதைதந் தாள்வாய் பரிந்து.

## ஆசான் கம்பன் வணக்கம்

(நேரிசை வெண்பா)

மக்களெலாம் மாந்திடவே வானத் தமுதனைய
மிக்கசுவைத் தேனாய் மிளிர்கின்ற— ஒக்கலிலாச்
சீராம காதையினைச் செய்தளித்த கம்பனடி
தாரா யணிந்தேன் தலை.

## அவைத் தலைவர் வணக்கம்

(நேரிசை வெண்பா)

கவி நயத்தை நூல்களிலே கற்றுநன்கு தேர்ந்து
செவிஇனிக்க ஓதுகின்ற செம்மல்— கவித்தென்றல்
முத்தையனார் இவ்வரங்க மூதலைவ ராயிருக்க
நத்தியவர்க் கென்வணக்கம் நன்கு

## அவையோர் வணக்கம்

(நேரிசை வெண்பா)

தமிழ்எழுத் தாளர்தம் சங்கப்பத் தாண்டு
தமிழ்விழாக் கண்டிடவே சார்ந்த— அமிழ்தாய
அன்பரீர்! அன்னையீர்! ஆயுங் கவிப்புலவீர்!
என்வணக்கம் ஏற்பீர் இசைந்து.

## அவையடக்கம்

(நேரிசை வெண்பா)

ஆதிகவி வால்மீகி ஆன்றகவிக் கம்பனுமே
கோதிலாச் சீதைசீர் கோலமதாய்— ஓதியதைச்
சித்திரிக்கும் என்பாச் சிறுபிழைகள் உற்றிடிலோ
சித்தம் பொறுப்பீர் சிறிது.

## முன்னுரை

(கலிவெண்பா)

இதுகாறும் இங்கியன்ற இன்பா அரங்கில்
பொதுவாக இவ்வூர்ப் புலவர்கள் பாடிவந்தார்
அவ்வழக்கை மாற்றி அதிதூரத் துள்ளகவிக்(கு)
ஒவ்வொ ளனையழைத்தே ஓர்கவிதை சீதைக்(கு)
எழுத்தாளர் சங்கம் எடுக்கும்பத் தாண்டு
விழும விழாவினிலே மேலாம் கவியரங்கில்
பாடென்றார் இக்குவனப் பாவலர்தான், என்
செய்வேன்?
பீடார் அவர்க்குநன்றி பேசிவிட்டுப் பின்னர்யான்

ஏதோ திடமுடனே எப்படியோ பாப்பாட
வாதின்றி வந்துவிட்டேன், வந்தாலும், கைக்
குழந்தை
பேச்சினைக் கேட்டுநீர் பேருவகை கொள்ளுதல்போல்
ஏச்சுரையா தென்பாவை ஏற்றுவப்பீர்! முன்
[illegible] பொருகால்,
கற்றிருந்த காதைதனில் காகுத்தன் தேவியினைப்
பற்றுடன்யான் கண்டசித்ரப் பாங்கதனை உங்கள்முன்
காட்டிட நான்முயல்வல், கண்டே அவள் பெருமை
நாட்டுவீர் நும்முள் நயந்து!



**மிதிலைகாண் மின்னரசி**
**(நிலைமண்டில ஆசிரியப்பா)**

மிதிலைமன் சனகன் வேள்வி செய்திடப்
பதித்தவன் உழுதபொற் படைசால் வழியே
தோன்றினள் சீதை சோபனம் பொங்கிட.
வான்மிகு செல்வி வரம்பிலா வனப்புடன்
கிளர்ந்த இன்பமாம் கிஞ்சுகச் சொல்லொடு
வளர்ந்து திகழ்ந்து வாய்த்தனள் பருவம்.
பொன்னும் ஒளியும் பூவும் மணமுமாய்
"தென்உண் தேனின் தீஞ்சுவைச் செஞ்சொற்
கவிஇன் ப"மெனக் கனிந்தே இலங்கும்
சயிவின் குவியைச் சாற்றவும் ஒல்லுமோ?
மின்னல் கோடி வீழ்ந்து வணங்கிடும்
மின்னர சென்னும் இன்னெழில் கூர்ந்தவள்
கொல்வேல் கூற்றம் வெல்லச் செய்திடும்
வல்லநல் விழிகளை வாகாய்க் கொண்ட
சொல்லுக் கடங்காச் சொக்கும் அழகியை
கல்லும் புல்லுமே கசிந்துகண் டுருகுமாம்.
'அழகெனும் அழகோர் அழகுபெற் றதே'போல்
இளமை நலமெலாம் எய்திய நங்கை
கன்னிமா டத்துக் களிப்புடன் தோன்றினள்.
அன்னநற் சமயம் அவ்வழி தனிலே
கோசிகன் இலக்குவன் கூடவே வந்தநல்
தேசிகம் மிகுந்த செம்மல் இராகவன்,
நோக்கினன் அவளை, நோக்கினள் அவளும்.
நோக்கம் இரண்டிலும் நுழைந்தது காதல்.
"கண்ணொடு கண்ணினைக் கவ்விஒன் றையொன்(று)
உண்ணவும் நிலைபெரு(து)" உணர்வுடன் ஒன்றினர்.
"பருகிய நோக்கெனும் பாசத் தால்பிணித்(து)"
"இருவரும் மாறிப்புக்(கு) இதயம் எய்தினர்."
'மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்

ஒருங்கிய இரண்டுடற்(கு) உயிரொன் ருயினர்.'
'அந்தமில் அழகனை அணுகி லாமையால்
பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள்.
சிந்தையும் நிறையும்மெய்ந் நலனும் பின்செல
மைந்தனும் முனியொடு மறையப் போயினுன்.'
அப்பால் வில்லினை அஞ்சன வண்ணன்
ஒப்பிலா முறையில் ஒடித்து முறித்துச்
செந்திருச் சீதையைத் திருமணங் கொண்டான்.
இந்த நிலையில் ஏதோ சுருக்கமாய்
மிதிலையில் காணும் மின்னல் அரசியைப்
பதித்தபாச் சித்திரம் பார்த்தீர் இங்ஙனே!

### அயோத்தி வாழ் ஆரணங்கு
(கலிவெண்பா)

பெண்ணின் அமுதன்னப் பேரழகுப் பெட்டகத்
[தாள்
அண்ணல் இராமனுடன் ஆழ்ந்தபே ரின்பப்
பெருவாழ்வு போகமுடன் பேணினுள். அன்னுர்
திருவாழ்வில் ஓர்துன்பம் சேர்தல்போல்
அன்ருெருநாள்,
ஐயன் முடிகொளுமுன் அன்னைகை கேயி
[சொல்லால்
வைதயல் மனைக்குவந்து, "சானகி! என்தம்பி
அன்புப் பரதன் அரசாள நான்வனம்
சென்று வருகிறேன், சிந்தைவருந் தாதிருநீ"
என்றலும், அந்த இறுதித்தீச் சொற்கள்தாம்
ஒன்ருய் அவள்செவியில் ஓரழலாய்ச் சுட்டதுவே.
தேம்பிய வாறவள், "தேவே! எனைஇங்கே
ஓம்பி இருக்க உரைத்தனை,ஏன்?" என்ருள்.

"அடவி உருக்கும் அரக்கழல் ஒத்த
கடுமை மணலொடு கல்லும் இருத்தலால்
உன்சே வடிக்கவை ஊறுகள் செய்திடும்
என்றே தடுத்துரைத்தேன்." என்றவனை நோக்கி,
"பரிவிகந்த ஐயனே! பற்றின்றிக் கூறும்
பிரிவுதனைக் காட்டிலும் பின்னுமக்கான் சுட்டிடுமோ?"
என்றனள் சீதை. இயம்பொணு நாயகன்
தன்னுடன் கானகம் சார்ந்தவள் சென்றனள்.
தாயுரை தன்னால் தரணியை நீத்ததும்,
நாயகன் கானகம் நண்ணுவன் என்றதும்,
விம்மலில் தேவியை வீரன் இராகவன்,
"சும்மா இரு"வெனச் சொன்னதும் விம்மி
அழுத அயோத்திவாழ் ஆரணங் கென்னும்
பழுதிலாப் பைந்தொடிப் பண்புகூர் பாங்கினில்
நாயகன் துன்பமே நாயகி துன்பமாய்
நேயமாய் மேற்கொளும் நெஞ்சத் துணிவார்
குணத்தின் அழகுள கோமகள் தன்னை
இணக்கமாய்க் கண்டுளோம் ஈண்டு.

## கானக வாழ்வின் களிப்பு

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மாநகர் நீத்துக் கானகம் போந்தனள்
மானவன் தன்னொடு மழைக்குழல் மங்கை.
ஆண்மட அன்னம் அணைந்தே ஆடிய
காண்டகு காட்சியைக் கண்டு களித்து
மேகமும் மின்னலும் மிளிர்வன போன்று
நாகமும் பிடியுமாய் நடந்து வந்தனர்.
மலைத்தோ ளானொடு மகிழ்ந்து விளையாடி
பலப்பல செய்திகள் பாங்குடன் அறிந்தனள்

தூய கங்கையைத் தோணியில் கடந்து
நாயகன் தன்னுடன் நயந்து செல்கையில்
பாலுடை மொழியளும் பகலவன் அனையனும்
சேலுடை நெடுநீர் சிந்தியே ஆடினர்.
அப்பால் வனஞ்செலும் அழியா அழகன்
ஒப்பரும் அழகிக்(கு) உரைத்தனன் வனவளம்.
"அருந்ததி அனையளே! அமுதினும் இனியளே!
பொருந்தி வண்டுகள் போதினை யூதல்காண்.
ஏந்திள முலையளே! எழுதரும் எழிலோய்!
காந்தள் முகையைக் களிமயில் பாம்பெனக்
கவ்வுவ காண்" எனக் கண்மணி நகைத்தாள்.
செவ்வி திகழும் சீர்பஞ் சவடியில்,
பங்கய வாளம் பார்த்த காளை தன்
மங்கையின் கொங்கையை மகிழ்ந்து நோக்குவன்.
குன்றினை நோக்கிய கோதையோ நம்பிதன்
குன்றனைத் தோளினைக் குறித்தே எண்ணினள்.
அன்னம் ஒதுங்கலை அண்ணல் கண்டதும்,
மின்னுள் நடைக்கது நாணியே விலகலாய்
எண்ணி நகைத்தான்; ஏந்திழை ஆங்கே,
தண்ணீர் உண்டுமீள் தந்திதன் நாயகன்
நடைக்குத் தோற்றே நடந்ததால் சிரித்தாள்.
விடைவீ ரனங்கு வீங்குநீ ராற்றில்
அல்லியைக் கண்டவள் மெல்லிடை நோக்கினன்.
எல்லியங் குவளையில் ஏந்தலின் வடிவுகண்(டு)
எண்ணினள் சானகி. இருவரும் புதுமணம்
பண்ணிய தம்பதிப் பாங்கதைப் போலக்
கண்மொழி முகமொழி கனிந்திடக் கலந்தே
எண்ணம் இனிக்க இன்புரை யாடினர்.
ஆனநல் இன்பம் அடைந்ததைச் சீதையின்
கானக வாழ்வின் களிப்பென லாமே!

## சிறையிருந்த செல்வி
(கலிவெண்பா)

பஞ்சவடி தன்னில் பையார் இலைக்குடிலில்
வஞ்சி தனித்திருக்க வஞ்சித் தவளைக்
குடிலோ டெடுத்துக் கொடுவரக்கி யர்சூழ்
கொடிமலர் வேய்ந்தன்ன கோல அசோகவனம்
என்னும் சிறையில் இருத்தினன் மாபாவி
தன்மால் விளைவால் தசமுகன் என்பான்.
விடிவிலாப் பூம்பொழிலில் வீற்றிருந்த சீதை,
துடிசோகச் சின்னம்; துயரத்தின் செம்பொருள்.
மெல்லிடையை ஒத்ததுபோல் வேறுள்ள
அங்கமெலாம்
நல்லாள் உருக்குலைந்தாள், நாளெல்லாம் வாடி
வெயிலிடை வைத்த விளக்கனைய மெய்யாள்
அயில்பல் புலிக்குழாத்(து) ஆன்றஇள மானென்(று)
அகப்பட்ட தொத்தே அவலம் அடைந்தாள்.
மிகவெருவி விம்மினள், மெய்தான் வெதும்பி
அழுதிரங்கி ஏரார்ந்த அண்ணலையே எண்ணித்
தொழுதே உயிர்காத்தாள். தூய மனத்தாள்
இரவிகுல மேன்மைகளை எண்ணித் தனக்கு
விரசமாய் நேர்ந்துள்ள வெம்பழிக்கே அஞ்சினள்.
'தன்னைச் சிறைமீட்கத் தன்கணவன் வந்தருள்
வான்'
என்றெண்ணித் திக்கெல்லாம் ஏங்கி
அவள் பார்த்தாள்.
குளிக்கா திருந்தாள், குளிர்முத்துப் பல்லைத்
துலக்கா திருந்தாள், சுரர்க்காய்க் கடைந்தெடுத்த
தேவ அமுதத்தால் சித்தசன் செய்தசீர்
ஓவியம் தூமத்தை உண்டது போலானள்.

என்பான் கவிமன்னன். ஈண்டவளே பேசுகிருள்:
"அன்றே இளையோன் தான் அண்ணலைக்
காணலேயோ?
காருறையும் லங்கைதனைக் காணலேயோ
இன்று வரை?
கோர அரக்கனெனைக் கொள்ளையிட்டுத்
தூக்கிவந்த
செய்தி அறியாரோ? செய்தவினைப் பாங்கிதுவோ?
உய்தி எனக்குண்டோ? உண்மைநிலே
யாருரைப்பார்?
மாண்ட சடாயுவன்றி மற்ருேர் அறியாரே
ஈண்டவர்கள் சந்திப்பே இல்லையோ இப்பிறப்பில்?"
என்றே இயம்பியவள் இன்னல் மிகஉழந்து
தன்நா யகனின் தனியட லாண்மையையும்
பண்பு நலன்களையும் பற்ருகத் தானெண்ணிக்
கண்ணீர் உகுத்துக் கலங்கினுள். பண்பு
நிறைவுறு பெண்மையின் நேர்உரு வன்ருே?
சிறையிருந்த செல்வி சிறப்பு.



## தீயனும் தூயளும்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மணியுடை அணிந்த மங்கையர் பலரும்
அணிவிளக் கேந்தி அன்னக் குழாம்போல்
இன்னொலி இசைக்க இயக்கர் நாகர்
இன்னும் சித்தர் எனுமெல் லியலார்
முன்செலப் பின்னே இன்னிசைக் கேற்ப
நன்வான் மங்கையர் நாட்டியம் ஆடிட
உருப்பசி எடுத்திட உடைவாள்; அடுத்துச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல
எண்ணிய சீதையின் இருங்கா மத்தனைத்
திண்ணிய இராவணன் தேவியைக் கண்டுதன்
நசையினை நவின்றே இசைந்திடச் செய்து
மிசைந்திடும் நோக்கொடு மிடுக்காய் வருகிறான்.
உண்ணும் புலியிடம் உற்றிள மான்போல்
புண்படும் சீதைமுன் போந்த இராவணன்,
கூசி ஆவி குலைவுறும் அவளிடம்
கூசிக் கூசிக் கூறினன் இவைகளை.
எவ்விடத் தெனக்கே இன்னருள் ஈவது?
நொவ்விடைக் குயிலே! நுவல்வாய் கனிவாய்!
இன்புறும் பருவமாம் இளமையைக் கழித்துநீ
இன்புற முதுமையில் இயலுமா? இயம்பு.
பெருமைப் பண்புளாய்! பேரழ குடையாய்!
அருள்வழி ஈகை அணுவள விலைஏன்?
இறந்தநின் கணவனை எண்ணிப் புலம்பேல்!
சிறந்தஎன் முதற்பெருந் தேவியாம் பேற்றினை
விலக்கேல்!" என்றடி வீழ்ந்து வேண்டினன்.
குலக்கொடி கண்களில் குருதி பாய்ந்தது.
மரணம் திரணமாய் மதித்தவள் வெகுண்டு

விரணம் உற்று வீரமாய் விளம்புவாள்:
“ஆரியன் சிலேவலி அறிந்தும் அறிவிலாய்!
சீரிலா தவைசொலிச் சிந்துவை யோசிரம்?
எண்திசை மாக்களே வென்றுமார் தட்டுநீ
திண்வில் இளேயனேச் செயிக்க அஞ்சினே.
மாயமாய் அவனே நீ மறைத்துப் போக்கியே
தீயநோக் காலெனேத் திருடியே வந்தனே.
அதனுடன் என்பதம் அஞ்சலி செய்தனே
இதுஉன் வீரமோ? ஏழையே! இனுங்கேள்!
வழுவார் வீரம் ஆயினும் வாகையைத்
தழுவியோர் ஆயினும் தருமம் தவறினல்
அழிவது திண்ணம்; அகன்றஉன் இருபது
விழியுள தலேகள் வெற்றிக்கு வித்தா?
வீரன் சிலேக்கு விளே ந்த இலக்கா?
தீரமாய் அவனுடன் செருச்செய முடியுமா?
மறைந்துநீ வாழ்வதை மழைவணன் அறிந்தால்,
விரைந்துநீ வீழ்வுறும் வெற்றி திண்ணமே.”
என்றனள் தூயள் எதிர்ப்பாய்த் தீயன்
தன்மனம் கொதித்துத் தருக்குடன் சாடினுன்.
“மானெனச் சென்றவர் மடந்தையைக் கவர்ந்தது
யானென அறிந்தால் இவண்உனே மீட்கார்.
அன்னவர் வருவரென் றெண்ணல் பேதைமை
பின்னவர் வரினும் பின்வாங் குவரே.
மும்மூர்த் திகளேயே முன்னம் வென்றதால்
எம்புகழ் இழுக்குற இந்நரர் இருவரைக்
கொல்ல விழையேன், குதலேச் சொல்லாய்!
சொல்லும் ஏவலால் தொழில்புரிந் திடவே
இற்றைப் பகலின் எய்தி இருவரைப்
பற்றிக் கொணரும் பான்மையைப் பாராய்!

இன்னும் திங்கள் இரண்டுள எண்ணுக.''
என்றே தீயன் இயம்பி அகன்றான்.
தீயனும் தூயளும் செப்பிய உரைவழி
நேயமாய்க் கற்பின் நீர்மையைக் காண்மினே!



அனுமனும் அன்னையும்
(கலிவெண்பா)

கள்ளுறைப் பூம்பொழில் காகுத்தன் தேவிதன்
உள்ளங் கலங்கி உயிர்விடவே எண்ணியங்கு
"கற்புடைய மங்கையர்தம் காதையிலோ
வாழ்க்கையிலோ
இற்பிரிந்தே உய்ந்தவர்கள் என்னனைய
ருண்டோ?
கணவனை நீத்துப்பின் கள்வன்தன் ஊரில்
இணங்க இருந்தவள் என்றென்னை ஏசுவரே

மன்னுயிர் காத்தின்னும் மாளா திருக்கின்ற
என்னின் அரக்கியர் எங்கேனும் உண்டோ?
ஆதலால் சாதல் அறத்தின் வழி"யெனவே
மாதவிப் பூமரம் வந்தனள்; தூக்கிடப்
பூங்கொடி பூட்டினாள் பொன்னுயிர் விட்டிட.
ஆங்கே அனுமன் அவள்முன்னே தோன்றி,
"இராமனின் தூதுவன் யான்"எனச் சொல்லிப்
பராவினன். ஐயமாய்ப் பார்த்தவள் பின்புதன்
ஐயந் தெளிந்தனள். "ஆண்டகையின்
நாமத்தால்
மெய்யுணர்வு தந்ததொரு மேலாம்
உதவியுண்டோ?"
என்றேத்தி மாருதிபால் ஏனை நலங் கேட்டனள்.
சொன்னான் நடந்தகதை தோன்றல்
நலமெல்லாம்.
தன்னிகர் வீரன் தனிஅடை யாளச்சொல்
சொன்னவை தோகையிடம் சொன்னான்
சுவைபடவே.
அத்துடன் அண்ணலின் ஆழிதனைக்
காட்டினான்.
முத்திரையாம் மோதிரத்தை மொய்குழலாள்
கண்டு,
மலடி ஒருத்தி மகவுபெற் றாள்போல்,
இலங்குமிரு கண்கள் இழந்தவன் மீண்டுமக்
கண்களைப் பெற்றுக் களித்ததற் கேற்றாற்போல்
எண்ணில் களிப்பினை எய்தினாள், நோக்கினாள்.
'பாழிய வீர! என் பாடினைத் தீர்த்தனை.
வாழிய வள்ளலே! வாழ்ந்திடு இன்றுபோல்'
என்றே அனுமனை இன்பமாய் வாழ்த்தினாள்.
பின்னும் அவனிடம் பேராழி தாண்டிய

தன்மையைக் கேட்டாள் தன்பே ருருவினை
அன்னைக்குக் காட்டினான் அஞ்சனை மைந்தன்.
அதிவியப் புற்றாள் அதுகண்ட மைதிலி.
கதித்த உருவதனைக் கட்டுப் படுத்தியபின்
அன்னையின் அல்லலுக் காற்று தவளிடம்
"அன்னையே! உம்மையான் அண்ணலிடம்
சேர்த்திடுவேன்.
ஆறுதுயர் ஆங்கே அடையலாம், என்தோளில்
ஏறுக!" என்றான் இகல்வீரன் அஞ்சலித்தே.
"ஆற்றலுக் கேற்றதே ஆயினும் இச்செயல்
ஏற்றலுக் கற்றதே என்பதென் பெண்மதி.
சொல்லினால் இவ்விலங்கை சுட்டெரிப்பே
னாயினுமவ்
வில்லின தாற்றலுக்கு மேவுமிழுக் கென்றுவிட்டேன்.
ஐம்பொறிகள் ஆள்பவனே ஆயினும்நீ
ஆண் மகனே!
செம்மலின் மேனியன்றித் தீண்டுதலும்
கூடுமோயான்?"
என்றிசைத்த சீதையின்பால் ஏற்றமார் கற்பழகு
நன்கு மிளிர்வதை நாமுமிங்கு கண்டுவந்தோம்.
அப்பால் அனுமன், "அழகனுக் கென்னசெய்தி
செப்புக!" என்றே சிரந்தாழ்த்திக் கேட்டனனால்.
"இன்னும் ஒருதிங்கள் இந்தஉயி ரோடிருப்பேன்.
என்னை அதற்குள் இவண்வந்து மீட்கலையேல்,
கங்கைக் கரையில் கடன்எனக்குச் செய்கவெனத்
துங்கமார் நாயகன்பால் சொல்லிடுக! மேலும்
இறக்கும் நிலையில் இலங்கையில்நான் என்றும்
சிறந்தமும் மாமியரைச் சேவித்தேன்
என்றுரைப்பாய்!

இந்தப் பிறவிக் கிருமாதை எந்நாளும்
சிந்தையினில் யானினையேன் சேயிழையே!
என்றுரைத்த
சீர்வரந் தன்னையும்நீ செப்புவாய்!" என்றுரைத்(து)
ஏர்மிகு சூடைமணி ஈந்தாள் அவன்பால்.
பெற்றஒளி முத்திரையைப் பேணினான்
பேரன்பாய்ப்
பற்றுடன் அன்னை பதம்பணிந்து சென்றான்.
அருமை உணர்ச்சிகளும் ஆன்றதோர் கற்பின்
பெருமை இலங்கிருவர் பேசிடவே கண்டதுதான்
அன்புக் கனிவாம் அனுமனும் அன்னையும்
பண்புரை ஆற்றின பாங்கு.

## மாயா சனகனும் மைதிலி உறுதியும்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

"எழில்மிகு சீதையை எய்திட உபாயம்
மொழி"கென இராவணன் மொழிந்ததும்
மகோதரன்,
"மருத்தனைச் சனகனாய் மாயமாம் வடிவில்
பொருத்திக் கொணர்ந்து பொன்னார் சீதையை
இணக்கச் செய்வோம்" என்றான். அதுபோல்
கணக்காய் நடக்குமுன் காவில் கனிவாய்,
"நெஞ்சினில் நினைப்புவிட் டாவி நீங்கிட
அஞ்சினேன் அடியேன் அடைக்கலம் திருவே!
பெண்ணெலாம் நீரே! பேறெலாம் உமதே!
புண்ணாய் என்மனம் பொருத்திவிட் டீரே!
எந்தன் மயல்நோய் இல்லா தொழியநும்
சுந்தரக் குமுதவாய்ச் சொல்லலால் வேறிலை."
என்றனன் இராவணன் இறைவியை இறைஞ்சி.

கன்றிய மைதிலி கடிந்தாள் அரக்கனை.
இருபது செவிகளும் எரியுறும் வண்ணம்
பொருவில் கணைகளைப் பொழிவது போன்று,
"பழிபாவம் எண்ணுப் பாதகா! தகாச்சொல்
மொழிந்தனை, நெஞ்சம் வெடித்திலை, இன்னுநீ—
அழிகிலை என்ருல் அறங்கற் பென்னும்?
இழிவுசால் தூர்த்தா! இன்னும் இவ்வுடல்
ஊணிலா திருந்தும் உயிரின் ஆசையால்
நாணிலா துன்முன் நானிருக் கலையால்.
அருமை நாயகன் அன்புக் களஞ்சியம்
அருங்குண பரன்என் ஆருயிர் மருந்தாம்
மாணமார் மேக வண்ணன் தன்னைக்
காணலாம் என்னுமென் காதலால் இருந்தேன்.
இன்னுமோ ராசை என்பால் உள்ளது.
என்னுயிர் நாயகன் தன்கூர் அம்பால்
கொன்றுநின் தலைகளைக் குலத்தை முற்றும்
வென்றருள் கோலங் கண்டிட வேண்டும்."
என்றனள் மைதிலி. எரிந்த தசமுகன்,
"கொன்று தீர்வனுன் கொழுநனை நிச்சயம்.
இளைத்தநுண் மருங்குலாய்! எனைஎதிர்த் தோரெலாம்
விளக்கில் வீழும் விட்டிலாய் மடிவர்.
கொற்றவாள் அரக்கர் கொணர்வருன் தந்தையை
வெற்றி எனக்கே விளைவதைக் காண்பாய்!"
என்றலும் சானகி இதயம் வெதும்பினுள்.
கன்றினுள்; வெகுண்டாள்; கனலெனத் துடித்தாள்.
அந்த நேரமே அலறிக் கொண்டு
வந்தனன் மருத்தன் மாயா சனகனுய்.
பொய்யாம் சனகனை மெய்யெனக் கண்டவள்,
கைகளை நெரித்தாள், கண்களில் மோதினுள்,

நெய்யெரி மிதித்தபோல் நிலத்திடைப் பதைத்து,
"மெய்ம்மை சிதைந்ததோ? வஞ்சனை வென்றதோ?"
என்றெலாம் அலறி, இதயந் துடித்துச்
சொன்னதைக் கம்பர் சொல்லால் கேண்மின்!

" கொல்லெனக் கணவற்(கு) ஆங்கோர்
கொடும்பகை கொடுத்தேன், எந்தை
கல்லெனத் திரண்ட தோளைப்
பாசத்தால்க்கட்டக் கண்டேன்
இல்லெனச் சிறந்து நின்ற
இரண்டுக்கும் இன்னல் சூழ்ந்தேன்
அல்லெனோ? எளியெ னேயான்?
அளியத்தேன் இறக்க லாதேன்."

"அன்னம் அன்னாய்! உன்னை அடையவே
உன்பெருங் காதலால் உந்தையை அழைத்துநான்
இப்பிழை செய்தேன், இதனைப் பொறுத்தி!
ஒப்புடன் எனக்குநீ உடன்படின் உந்தைக்(கு)
இந்திரன் மௌலியை இனிதே சூட்டுவேன்.
சுந்தர வாயினல் சொல்லொரு சொல்"லென
அறைந்த அரக்கனை அன்னை நோக்கி,
விரைந்து வீரமாய் வெடிப்புறப் பேசுவாள்:
"சொல்லவா மதுரச் சொற்கள் ? சொல்கிறேன்.
கல்லுவ காகமுன் கண்களைக் கண்ணனின்
வில்லின் அம்புகள் வெடிக்குமுன் மார்பினைப்
புல்லுமுன் உடலினைப் புலால்தினும் பேய்கள்.
புன்மக! வசனம் போதுமா? இனுங்கேள்!
உன்மகன் உயிரை இலக்குவன் ஒழிக்க,
அன்னவன் உடலை நாய்கள் அருந்த,
என்மகன் இறந்தான் என்றுநீ புலம்பல்,

என்பதே நான்சொலும் இன்சொற் களாகும்."
என்றனள் மைதிலி எரிமழை பொழிந்தபோல்.
"கொன்றிதோ உன்னைக் குவித்து விடுகிறேன்."
என்று சீறிய இராவண னிடத்து
மந்திரி மகோதரன் தடுத்து மறுத்(து)"இவள்
தந்தை சொன்னால் தயவாய்க் கேட்பாள்;
முனியேல்; சனகனே மொழிவான் அவட்"கென
மனங்கனிந் துரைத்ததும், மாயா சனகன்,
"அம்மா சானகி! அடியொடு நானும்
நம்குல மெல்லாம் நாசமு றுமலென்
ஆவிபோய் அழிதல் அழகோ? அரசன்
தேவியாய் இருத்தல் தீதிலை இணங்"கென
வஞ்சச் சனகன் வழங்கலும் மைதிலி
வஞ்சனை இதுவென நெஞ்சங் கொதித்துக்
கூறிய வீரக் கோலமாம் உரையினைச்
சீறிய கம்பரே செப்பக் கேண்மினே!

"நீயும்நின் கிளையும் மற்(று)இந்
நெடுநில வரைப்பும் நேரே
மாயினும் முறைமை குன்ற
வாழ்வெனோ? வயிரத் திண்தோள்
ஆயிரம் நாமத்(து) ஆழி
அரியினுக்(கு) அடிமை செய்தேன்
நாயினை நோக்கு வேனோ?
நாண்துறந்(து) ஆவி நச்சி."

"வரிசிலை ஒருவன் அல்லால்,
மைந்தரென் மருங்கு வந்தார்
எரியிடை வீழ்ந்த விட்டில்
அல்லரோ? அரசுக் கேற்ற
அரியொடும் வாழ்ந்த பேடை,
அங்கணத்(து) அழுக்குத் தின்னும்

நரியொடும் வாழ்வ துண்டோ ?
நாயினுங் கடைப்பட் டோனே.''

அல்லையே எந்தை யானும்
ஆகத்தான் அலங்கல் வீரன்
வில்லையே வாழ்த்தி மீட்கின்
மீளுதி மீட்சி என்ப(து)
இல்லையேல் இறந்து தீர்தும்
இதுஅல்லால் இயம்ப லாகாச்
சொல்லையே உரைத்தாய்! என்றும்
பழிகொண்டாய்!' என்னச் சொன்னாள்.''

தாயாம் சீதை சாடலும் அரக்கன்
மாயா சனகனை மாய்க்க முனைந்தான்.
மந்திரி தடுத்து மருத்தனை விடுத்தான்
சிந்தனை உணர்வைத் தீண்டுமிந் நாடகம்
செந்தமிழ்க் கம்பரின் சொந்தப் படைப்பு.
இந்த மாயா சனகன் என்னும்
கற்பனைத் திறனார் கலைக்கவி நலமார்
அற்புதப் பகுதியின் அழகுதான் என்னே!
மான வீரமார் மைதிலி உறுதியை
ஈனமாய் இடித்தவள் இயம்பிய உரைவழிப்
பத்தினி உள்ளப் பாங்காம் துணிவை
உத்தம நீர்மையை உயர்மிகு பெண்மையை
உணர்வோ வியமாய் உற்றுநாம் கண்டோம்.
உணர்ந்தவள் பெருமையை ஓர்ந்திடு வீரே !

### கற்பின் கனலி

(கலி வெண்பா)

அண்ணல் இராமன் அரக்கனை மாய்த்ததன்பின்
இன்புற்ற சீதையினை ஏர்க்கோலம் செய்வித்(து)
அழைத்தனள் வீடணன் அண்ணலைக் காண.

இழையிடையாள் ஏற்றுவந்(து) ஏந்தலடி
அஞ்சலித்தாள்.
ஐயன் அவளை அமைதியுற நோக்கியபின்,
வெய்ய சுடுசொற்கள் வெஞ்சினத் தோடுரைத்தான்.
"உண்டாய் அரக்கன் உணவுகளை நீவிரும்பி,
கொண்ட ஒழுக்கங் குலைந்தாய், மடிந்திலையே.
ஆண்டுறைந்து வாழ்ந்தனை, அச்சமின்றி
இவ்விடத்து
மீண்டதென்? எண்ணி விரும்புவேன் என்பதோ?
பெண்மை ஒழுக்கம் பிறப்பொடு கற்பெனும்
திண்மை தெளிவுண்மை சீர்கெட் டனஉன்னல்
ஆதலால் இத்தருணம் ஆவிதுற. இல்லையேல்,
ஏதுமொரு ஏற்றஇடம் ஏகித் தொலை"என்றான்.
துன்பமுற்ற தோகைக்குத் தோன்றல் பரிசிதுவா?
பன்னெடுநாள் நொந்திருந்த பாவைக் கிதுபரிவா?
வெந்ததோர் புண்ணிலே வேலெடுத்துப் பாய்ச்சு
தல்போல்
நொந்த மனத்தினளாய் நொய்ம்மைமிகு
சானகியாள்,
"வள்ளலே! அன்றுகண்ட மாருதி என்தவத்தை
உள்ளபடி உம்மிடத்தே ஓதலையோ? அத்துடன்
எத்தவத்தை எந்நலத்தை என்னுடைய
கற்பையெல்லாம்
பித்தர் செயலென்று பேசிடவே நேர்ந்ததுவோ?
மும்மூர்த்தி யானாலும் மொய்குழலார் நெஞ்சத்தைச்
செம்மையுறத் தேர்ந்து தெளிகிலார் ஆதலினால்
என்கற்பின் தூய்மையினை ஈண்டறியச்
செய்திடுவேன்."
என்றாள். இளையோன் எரியூட்டத் தீமுன்,

"மனத்திஞல் வாக்கிஞல் மாசுற்றேன் என்ருல்,
சினத்திஞல் சுட்டிடெனைத் தீச்செல்வா!"
என்றத்தீ
மூழ்கிஞள். தீத்தேவன் முன்தோன்றி அண்ணலின்
தாள்பணிந்து, "ஐயனே! தாங்கேன்தாய்
கற்பனலை.
ஏற்றுக்கொள் தூயவளை" என்றுசென்ருன்.
அண்ணல்தான்
ஏற்ருர்அத் தேவிதன்னை. இன்புற்ருர் எல்லாரும்.
அற்புதப் பெண்மைக்கே ஆனதோர் காவியமாம்
கற்பின் கனலி கதை.

## பெண்மையின் பெருமை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

நாண்மடம் அச்சம் பயிர்ப்பென நான்கும்
மாண்மிகு பெண்மையில் மருவிய குணங்கள்.
நாணம் என்பது நன்னெறி வெட்கமாம்
மானக் காப்பு; மடம்என் பதுதான்
மறைபிறர் அறியா மனத்தினில் அடக்கும்
நிறையே யாகும்; நிகழும் அச்சம்
வீரத் திற்கெதிர் விளைவுடல் ஊறுகட்(கு)
ஓரள வஞ்சும் உளஇயல் பண்பு;
பயிர்ப்பெனல் கூச்சம் பகர்ந்தஇப் பண்புகள்
உயிர்ப்பாய்ப் பெண்மை உடலினை ஓம்பும்.
தாய்மையும் கருணையும் தளிர்ப்பது பெண்மை,
தூய்மை ஒழுக்கம் துளிர்ப்பது பெண்மை,
உருக்கமும் நயமும் ஒளிர்வது பெண்மை,
பொருத்தமாய்ப் பண்புகள் பொலிவது பெண்மை,
கற்பெனும் ஒளியைக் காப்பதே பெண்மை,

நற்பெரும் வாழ்வை நல்குதல் பெண்மையே!
தன்இன் பமெல்லாம் தலைவனுக் காகவே
என்றுசீர்த் தியாகம் இயற்றும் இயல்பே
பெண்மைக் கணியெனப் பேசுங் கற்பில்
திண்ணமாய் நிற்கும்; சீரிய பண்பது.
இத்தனை பண்புகள் இணைந்துயர் பெண்மை
மெத்தவே மிளிரும் மேன்மைசால் சீதை,
"வனமது வரத்தான் வருவேன்" என்றதில்
கனமார் அவளது கடமையைக் காணலாம்.
சிறைதனில் இருந்து சிந்தை நொந்த
பொறைகளை விஞ்சிப் "போக்குவோம் உயிர்"என
எண்ணிய கருத்தில் இனியதோர் கற்புடைப்
பெண்மையே காணலாம். பேசிய இராவணன்
சொல்லில், காட்சியில், தோன்றிய வெறுப்பில்,
சொல்லின் செல்வனைத் தொடமறுத் துரைத்ததில்,
தசமுகன் நாட்டில் தானிருப் பதுவே
வசைதரும் என்றவள் மதித்த பயத்தில்,
கணவன் வருவான் மீட்பான் காணலாம்
எனஅவள் உயிர்வைத் திருந்த பொறையில்,
காற்றின் செல்வனைக் கண்டபின் கருத்தில்,
தோற்றிய ஐயச் சொல்லில் எல்லாம்
நாற்குணம் ஒளிரும் நற்கற் பொளியாய்
ஏற்றமார் சீதை இலங்கக் காணலாம்.
பேர்புகழ் இராமனைப் பிரிந்ததால் சானகி
சார்ந்த இடர்களோ சலதியின் பெரிதாம்.
அருங்கற் பையம் அடைந்ததால் அச்சம்,
இருகுடிக் குப்பழி எய்தலால் நாணம்,
மாதவன் வில்வலி மாசுறு ஏக்கம்,
மாதர் குலந்தனுல் வறிதுற்ற துடிப்பு,

இவைகள் சீதையின் இதயம் வருத்திய
நவைகளே ஆயினும் நல்லறங் காத்தவள்
ஒழுக்கம் பேணி உயர்புகழ் பெற்ருள்.
அழுத்தம் நெஞ்சில் அமைந்த வலிமையால்
அறமே வெல்லும் மறமே தோற்கும்
சிறந்தநம் பிக்கை செறிந்தவள் சீதை.
உற்ற பற்றருள் அற்றவன் போல
கற்புச் சோதனை நடத்திய கணவன்
இகழ்ந்தும் சினந்தும் இருகையால் வணங்கிப்
புகழ்சால் மரபினைப் புரந்தவள் சீதை.
அறஞ்சால் தமிழர் அமைத்த பெண்மையில்
பிறர்மனம் புகாத பெருங்கற் புளதால்,
தீண்டாக் கற்பெனும் செம்மைசால் உயரிய
மாண்புள பெண்மையை மணிச்சீ தைக்கு
மகுடமாய்ச் சூட்டினர் மகாகவி கம்பர்—
மிகவால் மீகியை மிஞ்சிய வகையில்.
பொற்பின் ஆணி, புகழின் சேக்கை,
கற்பினுக் கரசி, காமரு திருவெனும்
பெண்மையின் பெருமை பெரிதும் பிறங்கும்
உண்மை மிகுந்தவள் உயர்மிகு சீதையே.

## முடிவுரை

தன்பால் கற்பும் தகைசால் குணங்களும்
தன்நிறை யதனல் தற்காத்த சீதையின்
நன்நெறி களையே நற்ருய்! நங்கையீர்!
மன்னுமும் வாழ்வு மாண்புற் ருேங்க
ஏற்றே இலக்காய் இன்புற வாழ்வீர்!
போற்றி இராமன் பொற்றுணைச் சீதையே!

## நன்றியுரை

(நேரிசை வெண்பா)

பெண்மைக் கரசியெனும் பேரெழிலாள் சீதையின் நற்
பண்பமைந்த காதையினைப் பாடினேன் — எண்ணமுற
இன்புற்றுக் கேட்டவர்க்கும் எல்லார்க்கும் அன்புநிறை
நன்றியினைக் கூறுகின்றேன் நான்.

குறிப்பு:— இக் கவிதை 30—7—1972ல் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற, மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பத்தாவது ஆண்டு விழாச் சிறப்புக் கவியரங்கத்தில் பாடப் பெற்றது.

தெய்வீக வாழ்வின் சிறப்புறு அறநெறி

# தியானம் செய்

## இறை வணக்கம்

(நேரிசை வெண்பா)

சொல்லும் பொருளும் தொடர்ந்திணையு மாப்போல
அல்லும் பகலுமெனை ஆதரிக்கும் — வெல்லரிய
வேல்முருக னேயுனது மென்மலர்த் தாளிணைகள்
சால்புறவே சார்ந்துபணி வேன்.

## தமிழ்த் தாய் வணக்கம்

(நேரிசை வெண்பா)

என்றும் குமரியெனும் ஏற்றம் உடையவளே!
குன்ரு வளங்கொளுருக் கொண்டவளே! —
மன்றுளமர்
செந்தமிழே! இவ்வரங்கில் சேயேன் கவிபாடச்
சிந்தைகூர்ந் தின்னருளைச் செய்.

## சுவாமி சிவானந்தர் வணக்கம்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

பெருந்திரு உருவாய்ப் பிறங்கிய சிவமாய்
அருந்திறல் அறவுரை அறைந்த சிவமே!
நற்பெருந் தவத்தை நயந்தே இன்பமாய்ப்
பொற்சிவ பதத்தில் புகுந்தபே ரின்பமே!
நால்இரு யோகம் நவின்றத ஞேடு
சால்புள அறுநெறி சாற்றிய வாணியே!
அந்நெறி ஒன்ரும் அமைதித் தியானமாம்
நன்னெறி தனையே நான்பா டிடநின்
அருளைப் பெய்து தெருளைத் தருக!

## சுவாமி பிரணவானந்தர் வணக்கம்
(நிலைமண்டில ஆசிரியப்பா)

என்னைய! பொன்னையா! என்றே அன்பாய்
அந்நாள் அனைவரால் அழைக்கப் பெற்ற
அன்னார் சிவத்தால் ஆனசீர்த் துறவி
பொன்போல் போதம் பொதிந்த ஞானி
ஓங்கா ரமெனும் ஒலியத னோடு
நீங்கா இன்பம் நிறைந்த வாணியாய்ப்
பிறங்கும் பெருந்திருப் பிரணவா னந்த
சரஸ்வதி தாட்குத் தமியேன் வணக்கமே.

## அரங்கத் தலைவர் வணக்கம்
(நேரிசை வெண்பா)

ஆன்ற தமிழ்ப்புலமை ஆராய்ந் தறிந்ததனைத்
தோன்றச் சொலுந்திறமை தோய்ந்திலங்கும் —
தோன்றலெனும்
முத்தைய ரென்னும் மூதறிஞ ருக்கெனது
சித்தம் நிறைவணக்கம் தேர்.

## அவையோர் வணக்கம்
(நேரிசை வெண்பா)

அன்புப் பெரியோரே! அன்னையரே! பிள்ளைகளே!
பன்னூல் படித்தாய்ந்த பாவலரே! — இன்பக்
கவித்தேனை உண்டு களித்துளஉங் கட்கு
நவில்கிறேன் நல்வணக்கம் நான்.

## அவையடக்கம்
(நேரிசை வெண்பா)

தெய்விக வாழ்வின் சிறப்பார் அறநெறியில்
உய்யும் தியானமெனும் ஓர்நெறியை — ஐயன்மீர்!
பாடியுள என்கவியில் பண்பாய்க் குறைநீக்கி
நாடிடுவீர் அந்நெறியை நன்கு.

## தெய்வீக வாழ்வின் சிறப்புறு அறநெறி

(நிலைமண்டில ஆசிரியப் பாக்கள்)

தெய்வீக வாழ்வின் சிறப்பார் அறநெறி
செய்கையில் கைக்கொளின் சீவன் வீடுறும்
என்றுநம் சிவனுர் சொன்ன அறுநெறி
என்னெனில் அந்நெறி இயம்பக் கேண்மின்-
தொண்டுசெய் என்ருர், தூயநல் விரதமாய்க்
கொண்டதை ஆற்றிநீர் குவலயத் துயர்க!
அன்புசெய் என்ருர், அகத்தில் வைத்ததை
அன்புசெய் தென்றும் அவனியில் ஓங்குக!
கொடைகொடு என்ருர், கொள்கையாய்க்
கொண்டதை
கொடைகொடுத் தின்பம் கூடிட வாழ்க!
சுத்தமா யிருவெனச் சொன்னுர்; அகப்புறம்
சுத்தமாய்க் கொண்டுநீர் சுகம்பெற வாழ்க!
தியானம் செய்யெனச் செப்பிய முறைப்படி
தியானம் செய்திறைக் கியானம் எய்துக!
தன்னை யறிஎனச் சாற்றிய நெறிவழி
தன்னில் இறைவனைச் சார்ந்தறிந் தொடுங்குக!
இத்தகை அறுநெறி இறைமை வாழ்வினை
மெத்தவும் நமக்கு மேவிடச் செய்யும்.
அந்நெறி களிலோர் அகவழி பாடெனும்
சின்மயம் நல்கும் தியானம் என்னும்
யோக நெறிமுறை யூகமாய் விளக்கநான்
யோகியும் அல்லேன்; யுக்தியும் இல்லேன்;
பல்பெரும் ஞானப் பாடமுங் கேட்டிலேன்.
ஒல்லும் வகையால் சொல்ல முயல்வல்.

### தியானம் என்பது என்ன ?

இமயம் நியமம் இன்னும் ஆசனம்
நயமுள பிராணு யாமம் நான்கொடு
பிரத்தியா காரம் தாரணை பின்னும்
பிரம்மத் தியானம் பிணைக்கும் சமாதி

என்னும் யோக எண்வகை முறைகளில்
ஒன்றே தியானமென் றுரைத்தார் பதஞ்சலி.
அவமாம் புலத்தை அடக்கி மனதி
சிவயோ கஞ்சேர் தியான மாகும்.
செம்மை வாழ்வில் தெய்விக உணர்வுறத்
தம்மனம் தூய்மை சார்ந்திடல் வேண்டும்.
சார்ந்தபின் அதன்வழி, தம்நினை விறையில்
நேர்ந்திடச் செய்யும் நிலையே தியானம்.
தெய்விக உணர்வினை எய்துதற் குற்ற
உய்வாம் இடையரு ஒழுக்கமே தியானம்.
உலகச் சிந்தனை உள்ளிருந் தகற்றி,
இலகும் சிந்தனை இறைமையா யிருத்தல்.
அழுக்கெலாம் அகன்ற அகத்திலச் சிந்தனை
எழுப்பி நிரப்பி எண்ணலே தியானம்.
அகத்தில் இறைவன் அமர்ந்திட எண்ணும்
அகவழி பாடே ஆழ்ந்த தியானம்.
தன்னைய றிந்திடும் நன்னிலை எய்திட
மன்னும் கருவியாய் வாய்ப்பது தியானம்.
அகத்திடர் அகன்றிட அழிவின் மைபெறத்
தகச்செயும் பாட்டை, தகைசால் தியானம்.
மெய், ஒளி, இன்பம், மேன்மைசால் அமைதி
மெய்யறி வினையும் மேற்கொளல் தியானம்.

## தியானத்திற்குரிய ஆதரவுகள்

பிரமம் தூய்மையும் பெற்றியு மானதால்
விரவவே அதனுடன் வேண்டும் பண்புகள்,
அமைதியும் தெளிவும் அகத்தின் தூய்மையும்
அமைந்த கூர்மையும் ஒருமுனை அறிவுமாம்.
பச்சை மரமது எரியாப் பாங்குபோல்

எச்சமும் அழுக்கும் இதயத் திருப்பின்
நிச்சயம் தியான நெருப்புமூ ளாது.
இச்சை மனத்தினர் தியானம் இயற்றின்
உறங்குவர், கனவில் உலாவுவர், கோட்டை
பிறங்கக் கட்டிப் பெரிதும் உவப்பர்.
கண்ணை மூடிக் கருதும் நிலையில்
எண்ணிய இலட்சம் இன்றுலாட் டரியில்
எய்துமா எனக்கே இயம்புக! இறைவா!
எய்திடில் உனக்கே ஈவேன் பங்கென
உரைக்கும் நிலையில் உள்ளமுக் குள்ளவன்
இறைமைத் தியானம் இயற்ற வொண்ணான்.
ஆழ்ந்து பழுத்த அகத்தூய் மையினர்
ஆழ்ந்த தியானத் தமர்வர். அமர்ந்ததும்,
உணவுடை சூழல் உற்றிடம் பேச்சு
குணமுங் கல்வியுங் குரல்படிப் பெண்ணமும்
எல்லாம் அமைதித் தன்மையில் இருத்தல்
நல்லதென் றூர்சிவம் நாட்டிடத் தியானம்.

## தியானம் பழகுவது எப்படி ?

"சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரமாஸன மாத்மன:
நாத்யுச்ரிதம் நாதிநீசம் சேலாஜிந குசோத்தரம்.
தத்ரைகாக்ரம் மன: க்ருத்வா யதசித்தேந்திரிய க்ரீய:
உபவிஸ்யாசனே யுஞ்ஜ்யாத் யோகமாத்ம விசுத்தயே."

[பகவத்கீதை 6ஆம் அத்தியாயம், 11, 12 சுலோகங்கள்]

என்றே கண்ணன் இசைத்துளான் கீதையில்
நன்றதைத் தமிழில் நாமும் நோக்குவோம்.

சுத்த இடத்தில் மெத்த உறுதியும்
அத்தனை உயரமும் அதிகத் தாழ்விலாத்
துணி,தர்ப் பை,மான் தோல்களை யுடைய
அணியா சனத்தை அமைத்துக் கொண்டே
அவ்வா சனத்தில் அமர்ந்தே அகத்தை
ஒவ்வும் நிலையில் ஒருமுகப் படுத்தி
மனம்பொறிச் செயல்களை மடங்க அடக்கி
மனத்தூய் மைக்கே மாதியா னம்பயில்.
தலைமிட ருகம் சரிநே ரிருந்தே
அலையா நிலையில் ஆழ்ந்த உறுதியில்
மூக்கு நுனியை நோக்குவன் போன்று
நோக்கா தெத்திசை நோற்றல் வேண்டும்.
அச்சம் அகற்றி அமைதி அடைந்து
நிச்சயம் பிரமம் சரியம் நேருறக்
காத்தகம் அடக்கிக் கருத்தோ டதனைக்
காத்திடும் என்பால் சேர்த்திடச் செய்தே
என்னைக் குறியாய் எண்ணித் தியானம்
பண்ண அமர்ந்து பழகுதல் வேண்டும்.
என்றே பகவான் இயம்பினுன் கீதையில்.
நன்றே அருச்சுனன் நற்சிவத் தியானம்!
ஆற்றிய தவநிலை போற்றி யுரைக்கும்
ஏற்றமார் லில்லியார் இசைத்தலும் கேண்மின்!
"வலப்பாகம் செழும்பவளச் சோதி என்ன
வாள்நீலச் சோதிஎன்ன மற்றைப் பாகம்
கலப்பான திருமேனி அணிந்த நீற்ருல்
கதிர்முத்தின் சோதிஎன, மேனை ஈன்ற
குலப்பாவை யுடன்கயிலைக் குன்றில் வாழ்விற்
குன்றுடையோன் திருக்கோலம் குறிப்பால்
உன்னி,

புலப்பாடு புறம்பொசிய மார்பும் தோளும்
பூரித்தான் உடல்புளகம் பாரித் தானே.

"அங்கியால் அங்கியை வெதுப்பி வெம்மையைப்
பொங்கிய வாயுவால் போக்கி மெய்சிரம்
தங்கிய அமுதினுல் தண்ணெ ணும்படி
இங்கிதத் தொடுக்கினன் இதயம் தன்னையே"

பார்த்தன் பண்ணிய பரமத் தியானம்
பார்த்தோம் பாவினில் பாங்கறிந் தோர்மின்!
கண்ணன் கீதையில் கழறிய தொத்துப்
பண்ணும் தியானம் பழகும் முறைகளை
விரிவுற விளம்பினுர் வியன்சிவா நந்தர்
விரிவாம் விளக்கம் மேலும் காண்போம்.

## தியானத்திற்குரிய சில முக்கிய குறிப்புகள்

விடியல் வேளையே வீறுறும் தியானம்
வடித்தற் குற்றது, மனமது அடங்கிய
மான சீக உணர்வும் மறைபொருள்
ஆனநல் தியானம் அமையும் நேரம்.
அனைத்து யோகிகள் ஆழ்ந்தவ் வேளையில்
நினைவாம் தியானம் நிகழ்த்துவ ரென்றுமே.
ஆகவே நாடொறும் அந்தவை கறையில்
ஏகமாய் இருந்தே இயற்றுக தியானம்.
அகவழி பாட்டில் அகம்,விழி, மூளையை
மிகவலு வாக்கிட வேண்டாம். அதனை
அறியா ஒருசிலர் அடைகிருர் சோர்வு.
சரியாய் மனத்தைச் சாந்தம் கொளச்செய்.
பழகாக் குரங்கின் பான்மை யொத்துக்
குழம்பிய மனமது குதித்துத் தாவும்.
பின்புநல் லமைதியைப் பெற்றே மீளும்.

அகத்தில் ஒட்டிய அழுக்குகள் எல்லாம்
மிகவிடாப் பிடியால் மிக்கநல் லமைதியால்
அகற்றித் தியானம் ஆழ்ந்து பயிலுக!

## தியானத்தின் தோல்விக்குரிய காரணங்கள்

"பன்னீ ராண்டுகள் பண்ணினேன் தியானம்
நன்மைச் சாதனை நான்பெற வில்லை,
என்ன காரணம்?" எனச்சிலர் கேட்பர்
அன்னார் ஆழ்ந்த அகவழி பாட்டில்
உள்ளம் கடவுளை உன்னினும் அவர்தம்
உள்மனம் தன்னை ஒருநிலை நிறுத்தல்
அவர்தம் பொறிகளால் அடங்கிட விலையால்
அவரது தியானம் அடையும் தோல்வியே.

## தியான அனுபவங்கள்

அகவழி பாட்டில் அனுபவம் பலவிதம்
அகப்படும், அவையோ அகநிலை, பயிற்சி,
அகவழி பாடிடம் ஆகிய பலவால்
நிகழும், ஒலி,ஒளி, இன்பம் நேர்ந்திடும்.
இருக்கையி லிருந்தே எவ்வுவ போலும்,
மருத்தில் பறக்கும் மாதிரி போலும்,
ஆழ்ந்து அறிதலால் அடைகின் றூர்கள்.
இன்னும் ஒருசிலர் எழில்தே வதைகளைக்
கண்ணால் கண்டும், கட்டுடல் நிறைவாய்,
மகிழ்வாய், இன்பமாய், வலிவாய் அதனுடன்
மகிழும் அமைதியாய் மலிந்து காண்பர்.
இவையா வும்நும் ஏற்றம் உணர்த்தும்
சுவையாம் செயலெனத் துணிந்து கொள்ளுக!

## தியானத்தின் நன்மைகள்

தியானம் என்பதோர் தெய்விக மருந்தால்
வியாதிகள் பலவும் வெருண்டே ஓடிடும்.
ஆத்மிக அறிவினை அடையப் பல்துறை
சாத்திய மாக்கித் தருவது தியானம்.
அகத்தைத் தூய்மை ஆக்கிநல் லுறுதியை
மிகவே எழுப்பும் மெய்யிறை யுணர்வு.
இயங்கும் யோக சாதகர்க் கிதுவே
உயர்மா னிடவியல் உய்த்திட வழிசெயும்
தூயநல் லுறுதிசசால் எண்ணம் தோன்றிடும்,
தீயகக் குழப்பம் தேய்ந்து மறைந்திடும்.
மறைபொரு ளானஓர் உள்ளொலி மதித்துனை
இறைமை உணர்வுக் கிட்டுச் செல்லும்.
இக்குரல் தன்னையே அக்கறை கொண்டுகேள்.
மிக்களத் தீங்குகள் வெந்து தியானமாம்
நெருப்பில் அழியும், நிச்சயம் வீடெனும்
பெருத்தபே ரின்பம் பெற்றிடச் செய்யும்.

## தியானம் செய்

வாழ்க்கையின் துன்பம் வலிய நீங்கிடும்
வாழ்க்கை தெய்விகம் வாய்ந்திடும் வழியிது,
ஆகவே தியானி; ஆழ்ந்தே தியானி;
ஏகமாய்த் தியானி என்றூர் வாணி.
மெய்ஞ்ஞா னம்தரும் மேலாம் தியானம்
மெய்ப்பொரு ளோடுநாம் மேவிடச் செய்யும்.
எனவே தியானம் இயன்ருே ரெல்லாம்
தினமும் முறைப்படி செய்தே எய்துவீர்
தெய்விக வாழ்வெனும் சீரார் உயர்நிலை.


ஐயம் இல்லை. ஐயநீர் தியானம்
செய்என நமக்குச் சிவஇன் பவாணி
உய்வாய் உரைத்ததை ஒட்டியே தமியேன்
இதுவரை கவிதையில் ஏதோ இசைத்தனன்.
எதுவும் பிழையுறின் எளியனைப் பொருப்பீர்,
சிவானந் தர்தம் திருத்தாள் போற்றி
அவரவோ டவர்நெறி ஆற்றிநாம் உயர்வமே.

நன்றியுரை

(நேரிசை வெண்பா)

தெய்விக வாழ்க்கைத் திருச்சங்கப் பாவரங்கில்
தெய்வத் தியானத்தைச் செய்யெனும்—
செய்யுளினைக்
கேட்டிட்ட உங்கட்குக் கேண்மைமிகு
நன்றியொடு
நாட்டுகிறேன் நல்வணக்கம் நான்.

குறிப்பு :- இக் கவிதை 5 — 1— 1969-ல் மலேசியா, அலோர்ஸ்டாரில் நடைபெற்ற தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் முதல் ஆண்டுவிழாக் கவியரங்கத்தில் பாடப் பெற்றது.



## செல்வி தாலாட்டு

1. கண்ணே! கதிர்மணியே! கட்டழகுப்
பெட்டகமே!
பெண்ணே! பெருந்திருவே! பேசும்பொற்
சித்திரமே!

2. தேனே! திருவிளக்கே! தெய்வத் திருவமுதே!
மானே எனப்புகலும் மார்தரசே கண்வளராய்.

3. கட்டிக் கரும்பே! கலிதீர்க்கும் கற்பகமே!
மட்டிலாச் செல்வ மகளே! நீ கண்வளராய்.

4. முல்லை மலரோ? முருகளிக்கும் தாமரையோ?
மல்லிகையோ செவ்வந்தி மாமலரோ?
சண்பகமோ?

5. பண்ணினிமை தோற்கப் பழகு தமிழ்ப்பேசும்
வண்ணப் பசுங்கிளியோ ? மாமேவும்
பூங்குயிலோ?

6. பொன்னே! மணியே! நற் புண்ணியத்தின்
புண்ணியமே !
மின்னே உருவெடுத்து மேதினியில்
தோன்றினையோ ?

7. சைவ நெறிதழைக்கத் தக்கவழி காட்டியநல்
தெய்வமங்கை யர்க்கரசி செம்மையுருக்
கொண்டவளோ ?

8. ஆன்ற சிவனடியார் அன்புமிகு சுந்தரரை
ஈன்ற இசைஞானி என்பவரும் நீதானே?

9. பண்டு பகைவென்று பார்முழுதுங் காத்தபெருங்
கொண்டல் இரகுராமன் கோத்தாயும்
நீதானே ?

10. கம்பன் வழங்கியநற் காவியத்தின் நாயகியாம்
உம்பருவந் தேத்தும் உயர்சீதை நீதானே ?

11. சீரார் கணபுரத்துத் தெய்வத் திருமாலை
ஆரா தனைசெய்த ஆண்டாளும் நீதானே?

12. உத்தமக் கொள்கை உயர்பண்பு எந்நாளும்
நத்தி அறம்வளர்க்கும் நல்லாளும் நீதானே?

13. எங்கள் குலந்தழைக்க எந்நாளும் நீங்காத
மங்கலமாய் வந்த மகளே! நீ கண்வளராய்.

14. கண்ணில்மை தீட்டிக் கனக நகைபூட்டிக்
கண்கவர ஆடிவரும் கண்மணியே !
கண்வளராய்.

15. புன்னகை காட்டியொரு போதை எழச்செய்தே
இன்பக் கடலாழ்த்தும் என்னுயிரே!
கண்வளராய்.

16. வாணியின் நல்லருளால் வாக்குவளம்
பெற்றிலங்க
ஆணிப்பொன் தொட்டிலிலே அன்பே! நீ
கண்வளராய்

17. காண்பார் கருத்தீர்க்கும் கட்டழகும் நற்றிறமும்
மாண்புமே மன்னும்என் மாமணியே!
கண்வளராய்.

18. பொய்ம்மை தனை நீக்கிப் போதம் மிகத்தேக்கி
மெய்ம்மை தனைக்காகும் மெல்லியலே!
கண்வளராய்.

19. சங்கம் வளர்த்த தகைசார்ந்த செந்தமிழில்
பொங்கிவரும் இன்பப் பொருளே! நீ
கண்வளராய்.

20. பெண்மை நலமெல்லாம் பேணிப் பெருவாழ்வின்
எண்ணம் தழைக்கவரும் என்னரசி
கண்வளராய்.

21. வள்ளுவனார் தாம்வகுத்த வான்மறையின்
வாழ்வியலைக்
கொள்ளப் பிறந்துவந்த கோதையே!
கண்வளராய்.

22. வையம் தனில்நன்கு வாழ்வாங்கு வாழ்ந்திடநற்
செய்கை களைக்கொள்ளும் செல்வியே!
கண்வளராய்.

ஓம்

# ஆறுபடை வீடுகள்

1. திருப்பரங்குன்றம்.

பூதத்தால் நக்கீரன் பொன்றுங்கால்
தன் உயிரை
ஆதரவாய்க் காத்தே அருள்புரிய—போதமுள்ள
ஆற்றுப் படைநூலை ஆக்கிப் பரங்குன்றில்
போற்றினான் வேலனடிப் போது.

2. திருச்சீரலைவாய்.

சூரனை வென்றதோர் சோபனத்தைக்
கொண்டாட
வீர முருகனுக்கு வெற்றிவிழா — ஆரணங்கள்
ஆர்ப்பொலிக்கச் செந்தூரில் ஆற்றியவான்
தேவரைக்
கார்த்திகையன் காத்தான் கனிந்து.

3. திரு ஆவினன்குடி.

மாங்கனியைத் தந்தைபால் வாங்க இயலாமல்
ஏங்கிப் பழநிமலை ஏற்றுறையும் — காங்கேயன்
பத்மபதம் சிந்தித்தால் பாவமெலாம் நீக்கிப்பின்
இத்தரையில் உய்வோம் இனிது.

4. திருவேரகம்.

ஓங்காரத் துட்பொருளை ஓராசான் போலிருந்து
பாங்காய்ச் சிவன்பால் பகர்ந்ததால் — ஓங்கும்
திருவே ரகத்துவாழ் சேய்சாமி நாதன்
திருப்பெயர் பூண்டான் சிறந்து.

5. குன்று தோருடல்.

குன்றுதோ ருடலெனும் குன்றெல்லாம்
கோவிலாய்
என்றுமே கொண்டான் எழில்முருகன் --
என்றலும்
செவ்வேள் துதிப்பார்க்குச் சீரருளைப்
பெய்துநலம்
ஒவ்வும் தணிகை உயர்வு.

6. பழமுதிர்சோலை.

சுவையார் பழமுதிர் சோலைமலை வாழும்
சிவனார் அருளொளிகூர் சேய்நம் — நவை
யனைத்தும்
நீக்கித் திருவருளால் நீடூழி வாழவைப்பான்
ஊக்கமுடன் போற்றிவரின் ஓர்ந்து.

# 'சீதை' கவிதையின் அருஞ்சொற்பொருள்

## ஆதிபகவன் வணக்கம்

நிலவிடும்-வழங்கிடும். நித்தன்-கடவுள். ஆண்டகை-வீரன். ஆர்ந்த-நிறைவான.

## அன்னைத் தமிழ் வணக்கம்

வியன்-பெருமை. செம்பொருள்-செஞ்சொல்லால் உணர்த்தப்படும்பொருள்.

## ஆசான் கம்பன் வணக்கம்

மாந்தல் - உண்ணுதல். மிளிர்கின்ற - விளங்குகின்ற. ஒக்கல்-சமமாதல். தார்-மாலை.

## அவைத் தலைவர் வணக்கம்

ஆயும்-நுணுகி அறியும்.

## அவையடக்கம்

ஆதிகவி - முதற்கவிஞன், வால்மீகி. ஆன்ற-மாட்சிமையுடைய. கோது-குற்றம்.

## முன்னுரை

விழுமம்-சிறப்பு. பீடார்-பெருமை பொருந்திய. முயல்வல்-முயற்சி செய்வேன்.

## மிதிலைகாண் மின்னரசி

மன் - மன்னன் படைசால் - உழவுசால். சோபனம்-மகிழ்ச்சி. வான்-பெருமை. கிளர்ந்த-நிறைந்த. கிஞ்சுகம்-கிளி. தென்-(இங்கே) வண்டு. சவி-அழகு. குவி-திரட்சி. ஒல்லுமோ-இயலுமோ. கூர்ந்தவள்-மிகுந்தவள். கூற்றம்-எமன். தேசிகம்-அழகு, ஒளி. மருங்கு-இடை. வசையில்-குற்றம் இல்லாத. ஒருங்கிய-ஒரு மனப்பட்ட. அந்தமில்-முடிவில்லாத. பைந்தொடி-பசும் பொன்னாலாகிய தொடி

என்னும் வளையையுடைய சீதை. ஓவியப் பாவை-சித்திரப் பதுமை. நிறை-(மனத்தை) நிறுத்தம் ஆற்றல் (மனவுறுதி) மெய்ந்நலன்-உடம்பின் அழகு.

## அயோத்தி வாழ் ஆரணங்கு

அழல்-நெருப்பு. ஓம்பி-பாதுகாப்பாக- அடவி-காடு. உருக்கும்-வருத்தும். ஊறு-துன்பம். பரிவு-இரக்கம். இயம்பொணு - சொல்ல முடியாத. தரணி-பூமி. நண்ணுவன்-அடைவான். விம்மலில்-தேம்பி அழாத.

## கானக வாழ்வின் களிப்பு

மானவன்-வீரன். மழைக்குழல்-மேகம் போன்ற கருங் கூந்தல். நாகம்-(இங்கே) ஆண்யானை. பிடி-பெண் யானை. பகலவன்-சூரியன். சேல்-ஒரு வகை மீன். நெடுநீர்-வெள்ள நீர். போது-மலரும் பருவத்து அரும்பு. ஏந்து-நிமிர்ந்து. எழுதரும்-எழுத இயலாத. காந்தள் முகை-காந்தள் பூவின் மொட்டு. செவ்வி-அழகு. பங்கய வாளம்-தாமரை மலரில் தங்கியுள்ள சக்ரவாகப் பறவை. நம்பி-ஆடவரில் சிறந்தவன். ஏந்திழை-பெண். தந்தி-ஆண்யானை. வீங்கு நீர்-மிகுந்த நீர். எல்லியங் குவளை - இருள் போலக் கறுத்த அழகிய நீலோற்பல மலர். ஏந்தல்-பெருமையிற் சிறந்தவன்.

## சிறையிருந்த செல்வி

பையார்-பசுமை பொருந்திய. இலைக் குடில்-இலைகளாலான குடிசை. மால்-(இங்கே) காம வேட்கை. செம்பொருள்-நேர் பொருள். அயில்-கூர்மை. அவலம்-வருத்தம். வெருவி -அஞ்சி. வெதும்பி-வாடி. ஏரார்-அழகு பொருந்திய. உயிர்க்கும்-பெரு மூச்சு விடும். விரசம்-நிந்தை. சுரர்-தேவர். சித்தசன் - மன்மதன். தூமம்-புகை. உழந்து - வருந்தி. அடல்-வலிமை, உகுத்தல்-சிந்துதல். நசை-ஆசை. மிசைந்திடும்-உண்டிடும் (இங்கே) அனுபவித்திடும்.

## தீயனும் தூயனும்

போந்த-வந்த. எவ்விடத்து-எப்போது. நொவ்விடைக் குயிலே-வருந்துகின்ற இடையையுடைய குயில் போன்றவளே. நுவல்வாய்-சொல்வாய். குருதி-இரத்தம். திரணம்-அற்பம். விரணம் உற்று-புண் அடைந்து. ஆரியன்-இராமபிரான். சிலைவலி-வில்லின் வலிமை. வழுவார்-தவறுதவர்கள். வாகை-வெற்றி. இலக்கு-குறிப்பொருள். செரு-சண்டை. மழைவணன்-மேகவண்ணனை இராமன். குதலை-இனிய மொழி. எய்தி-சென்று.

## அனுமனும் அன்னையும்

நீத்து-பிரிந்து. கள்ளுறை-தேன் தங்கியுள்ள. பாங்கர்-பக்கம். பைங்குருத்தி-பசுமையான மாதவி மரம். பராவினன்-வணங்கினன். தோன்றல்-பெருமையிற் சிறந்தோன். ஆழி-மோதிரம். பாழிய-வலிமை பொருந்திய. பேராழி-பெருங்கடல். கதித்த எழுச்சி பெற்ற. ஆறுதுயர் (துயர் ஆறு)-துன்பம் தணியப் பெறு. இகல்-வலிமை. மேவும் இழுக்கு (இழுக்கு மேவும்)—தாழ்வு அடையும். செம்மல்-பெருமையிற் சிறந்தோன். ஏற்றம்-மேன்மை. உகந்தோம்-மகிழ்ந்தோம். கடன்—இறந்தார்க்குச் செய்யும் நீர்க் கடன் என்னும் சடங்கு. சேவித்தேன்-வணங்கினேன்.

## மாயா சனகனும் மைதிலி உறுதியும்

கா-சோலை (இங்கே) அசோக வனம். மயல் நோய்-காம நோய். சுந்தரக் குமுதம்-அழகிய அல்லி. இறைவி-அன்னை. கன்றிய-கடுப்புற்ற. பொருவில்-ஒப்பில்லாத (அல்லது) போர் புரியும் வில். தூர்த்தன்-காமுகன், வஞ்சகன். ஊண்-உணவு. குணபரன்-நற்குணங்களை ஆபரணமாக உடையவன் (இராமன்). மாணம்-மாட்சிமை. எரிந்த கோபங்கொண்ட. கொற்றவாள்-வெற்றிவாள். நெய் எரி-நெய் இட்டு எரியும் நெருப்பு. பாசம்-கயிறு. அளியத்தேன்-இரங்கத் தக்கவள். மௌலி-கிரீடம். மதுரம் - இனிமை. கல்லுவ - தோண்டும்.

புல்லும்-தழுவும். எரிமழை-நெருப்பு மழை. புன்மக-அற்பச் சிறு பயலே. அருந்த-உண்ண. கிளை-சுற்றம், உறவினர். வரைப்பு—எல்லை. ஆழிஅரி-சக்ராயுதத்தையுடைய திருமால். வரிசிலை-கட்டமைந்தவில். மருங்கு-பக்கம். அரி-ஆண்சிங்கம். அங்கணம்-சாக்கடை.. ஆகத்தான்-அகன்ற மார்புடையவன். அலங்கல் - வெற்றிமாலை. நீர்மை-சிறந்த குணம்.

## கற்பின் கனலி.

ஏர்-அழகு. இழையிடை-நூல் இழை போன்ற இடை. வெஞ்சினம் - கடுங் கோபம். குலைந்தாய்-கெட்டாய். திண்மை —உறுதி. நொய்ம்மை-தளர்வு. மொய்குழலார்-பெண்கள். தெளிதல்-அறிதல், மாசு - குற்றம்.

## பெண்மையின் பெருமை

மருவிய—கலந்துள்ள. நிறை மனத்தை அடக்கும் ஆற்றலாகிய மனவுறுதி, கற்பு. உயிர்ப்பு - மூச்சு. ஓம்பும்-பாதுகாக்கும். கனம்-பெருமை. பொறை-பொறுமை. விஞ்சி-மீறி. சொல்லின் செல்வன் - அனுமான். தசமுகன்-பத்துத் தலை இராவணன். காற்றின் செல்வன்-அனுமான், மாருதி, தோற்றிய-தோன்றிய. நாற்குணம்-நாணம், மடம், அச்சம். பயிர்ப்பு என்னும் நான்கு குணங்கள். சலதி-கடல். சால்-சார்ந்த. வறிது-சிறுமை. நவை-இழிவு, குற்றம். உற்ற பற்று - பொருந்திய அன்பு. புரந்தவள் காத்தவள். பொற்பு-அழகு. ஆணி-எல்லை,மேன்மை சேக்கை - தங்குமிடம். காமரு - விரும்பத்தக்க. பிறங்கும்-விளங்கும்.

## முடிவுரை

தகை-பெருமை. அழகு. நிறை-காப்பன காத்துக் கடிவன கடியும் திண்மை, அழிவின்மை. இலக்கு-இலட்சியம்.

---

# 'தியானம் செய்' கவிதையின் அருஞ்சொற்பொருள்

## சுவாமி சிவானந்தர் வணக்கம்

பிறங்கிய-விளங்கிய. அறைந்த - கூறிய. நால்இரு யோகம் - எண்வகைத்தவம் என்னும் அட்டாங்க யோகம். அறு நெறி-ஆறு நெறிகள். தெருள்-தெளிந்த ஞான அறிவு.

## சுவாமி பிரணவானந்தர் வணக்கம்

சிவத்தால்-சுவாமி சிவானந்த சரசுவதியால். போதம்-மெய்ஞ்ஞானம். ஓங்காரமெனும்........வாணி-பிரணவானந்த சரசுவதி.

## அரங்கத் தலைவர் வணக்கம்

தேர்-அறிக.

## தெய்வீக வாழ்வின் சிறப்புறு அறநெறி

வீடுறும்-மோட்சத்தை அடையும். குவலயம்-உலகம். அகம்-மனம். அகப்புறம்-உள்ளும் புறமும். இறைக்கியானம்-தெய்வ ஞானம். சாற்றிய-சொல்லப்பட்ட. ஒடுங்குக-அடங்குக. சின்மயம்—ஞானமயம். யூகம்-விவேகம். யுக்தி-கூர் அறிவு. ஒல்லும்-இயன்ற. முயல்வல்—முயல்வேன்.

## தியானம் என்பது என்ன ?

இயமம் - அவா, களவு, கொலை, பொய் நீக்கிப் புலனடக்கல். நியமம்-செய்கடன். ஆசனம்-உட்கார வேண்டிய முறை. பிராணயாமம்-உயிர் மூச்சை நம் வசம் அடக்குதல். பிரத்தியாகாரம்-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகளின் ஆக்கமான ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தினை அடக்கல். தாரணை-இதயம், கழுத்து, கபாலம், நாபி, நெற்றி ஆகிய ஒன்றில் சிந்தை வைத்தல். பிரமத்தியானம்-கடவுளை (மனத்தில்) நிறுத்தித் தியானித்தல்.

சமாதி–தன்னைத்தான் காணுதல் என்னும்‘ நானே பிரமம்’என்ற இறைவனைக் காணுதல். அவம்-பயனின்மை. புலம்-ஐம்புலம். மனுதி - மனம் முதலியன. உய்வு-வாழ்வு. உள்-மனம் இலகும் -விளங்கும். அச்சிந்தனை–அந்த இறைமயமான சிந்தனை. அகத்திடர்-மனத்துன்பம். அழிவின்மை-வீடுபேறு (மோட்சம்) தக-தகும்படி. பாட்டை-வழி.

## தியானத்துக்குரிய ஆதரவுகள்.

பிரமம்-உண்மை அறிவின்ப வடிவமாய் உலக முழுதும் தோன்றி ஒடுங்குவதற்கு இடமாகியுள்ள பொருளாகிய கடவுள். பெற்றி-பெருமை, மேன்மை. விரவுதல்-ஐக்கியமாதல். பாங்கு-தன்மை. எச்சம் அழுக்கு - அழுக்கின் மிச்சம். இச்சை மனத்தினர்-(தூய்மையற்ற)ஆசை மிகுந்த மனமுடையவர்கள். எய்துமா-கிடைக்குமா

## தியானம் பழகுவது எப்படி ?

ஒவ்வும்-பொருந்தும். மடங்க-ஒடுங்க. மிடறு-கழுத்து–உடம்பு. நோற்றல்-தவஞ் செய்தல், சேத்திட-தங்கிட. வாள்-ஒளி. நீறு-விபூதி. கதிர்-ஒளிமயமான. மேனை-இமவான் மனைவியான மேனகை. குலப்பாவை-உமாதேவி. அங்கியால் - (இங்கே) பிராணவாயுவால். அங்கியை-(இதய) நெருப்பை. பரமம்–சிவம். ஓர்மின்-எண்ணிப் பாருங்கள். கழறியதொத்து-சொல்லியதைப் போன்று.

## தியானத்துக்குரிய சில முக்கிய குறிப்புகள்

வீறு - சிறப்பு. வடித்தற்குற்று- (உருக் கொள்ளச்) செய்தற்குப் பொருத்தமானது. ஏகம்-தனிமை.

## தியானத்தின் தோல்விக்குரிய காரணங்கள்

அகவழிபாடு - தியானம். உன்னினும் - எண்ணினுலும். பொறி - ஐம்பொறி.

## தியான அனுபவங்கள்

அகவழி பாடிடம்-தியான இடம். எவ்வுதல்-தாவுதல். மருத்து-காற்று. ஏற்றம்-மேன்மை.

## தியானத்தின் நன்மைகள்

சாத்தியம்-அனுகூலம். இயங்கும்-பழகும். இயல்-நன்மை. உய்த்திட-சேர்த்திட.

## தியானம் செய்.

வாய்த்திடும் - கிடைத்திடும். வாணி-(இங்கே) சுவாமி சிவானந்த சரசுவதி. சிவ இன்ப வாணி—சிவானந்த சரசுவதி.